# 20 இலங்கையில் உள்ள சமயங்கள்

இலங்கையில் உள்ள மக்களால் சைவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்னும் சமயங்கள் பின்பற்றப்படுகின்றன. சமயங்கள் யாவும் மக்களை நல்வழிப்படுத்துவன. சமயங்கள் வேறுபட்டவையாக இருந்தாலும் அவற்றிடையே சில பொதுவான பண்புகளும் காணப்படுகின்றன.

சைவ சமயத்தவரின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சைவ சமயத்தவர்கள் வேதம், ஆகமம் என்னும் இரண்டையும் முதன்மை நூல்களாகக் கொள்கின்றனர். அச்சமயத்தினர் கோயிலுக்குச் சென்று (சிவனை வழிபடுவர்) இறைவழிபாடு செய்வர்.



பௌத்த மதத்தைத் தோற்றுவித்தவர் கௌதம புத்தர். திரிபீடகம், தம்மபதம் என்பன பௌத்த சமயத்தின் முதன்மை நூல்களாகும். அந்தச் சமயத்தவர்களின் வழிபாட்டுத் தலம் பௌத்த விகாரைகளாகும்.



கிறிஸ்தவர்கள் பரமபிதாவை வழிபடுவர். அத்துடன் மீட்பரான இயேசு கிருஸ்துவை வழிபடுகின்றனர். பைபிள் என்பது அவர்களது முதன்மை நுலாகும். கிருஸ்வர்களின் வழிபாட்டு இடம் தேவாலயம் என அழைக்கப்படுகின்றது.



இஸ்லாம் சமயத்தவரின் வழிபாட்டுக்கு உரியவர் அல்லாஹ் ஆவார். அவர்களது முதன்மை நூல் திருக்குர்ஆன் என அழைக்கப்படும். அச்சமயத்தவர்களின் வழிபாட்டுக்குரிய இடம் பள்ளிவாசல் எனப்படும்.

இலங்கையராகிய நாம், எமது சகோதர இனத்தவர்களது சமய, கலாச்சார அம்சங்களை அறிந்து, அவற்றுக்கு மதிப்பளிப்பது நல்ல பண்பாகும்.



## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பௌத்த சமயத்தவரின் வழிபாட்டிடம் எவ்வாறு அழைக்கப்படும்?
2. கிறிஸ்தவர்களுடைய முதன்மையான நூல் எது?
3. இஸ்லாம் சமயத்தின் வழிபாட்டிற்குரியவர் யார்?

## செயற்பாடு

பின்வரும் அட்டவணையை நிரப்பி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

| சமயங்கள் | வழிபடப்படுபவர் /சமய முதல்வர் | முதன்மையான நூல் | வழிபடும் இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

## பாடச்சுருக்கம்

- ✶ இலங்கையிலுள்ள மக்கள் சைவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்னும் சமயங்களைப் பின்பற்றுகின்றனர்.
- ✶ ஒவ்வொரு சமயத்திற்கு சமய முதல்வர் அல்லது வழிபாட்டுக்கு உரியவர், முதன்மை நூல், வழிபடும் இடங்கள் ஆகியன உள்ளன.
- ✶ இலங்கையராகிய நாம் சகோதர இனத்தவர்களது சமய, கலாச்சார விடயங்களுக்கு மதிப்பளிக்க முன்வர வேண்டும்.